# 18

# நித்திய வெகுமதியும் நித்திய தண்டனையும்

"நித்தியம்" என்ற ஒருபோதும் முடிந்திராத இருப்பு என்பது நமது சிந்தைகளினால் புரிந்துகொள்ள மிகவும் கடினமான கருத்துக்களில் ஒன்றாகும். நமது இயல்பான அண்டத்தில் நாம் காணக்கூடிய மற்றும் தொடக்கூடியவைகள் எல்லாம் ஒரு தொடக்கத்தைக் கொண்டுள்ளன மற்றும் அவைகள் எல்லாம் ஒரு முடிவையும் பெறும்; ஆகையால், நித்தியத்தின் கருத்தைப் புரிந்து கொள்வது நம்மை மூழ்கடிக்கக் கூடியதாக இருக்க முடியும். நித்தியம் என்பது நமது அனுபவத்திற்குப் புறம்பே இருப்பதால், நமது மனங்களினால் அதைப் புரிந்து கொள்ளுவதென்பது ஏறக்குறைய முடியாததாகவே இருக்கின்றது.

நமது இந்தச் சிறிய வாழ்க்கையில் நாம் செய்தவைகள் நித்தியத் திற்கும் தேவனோடு இருப்பதை ஈட்ட முடியாது என்றாலும், தேவன் பரலோகத்தின் ஆச்சரியங்களை நமக்குத் தருவார் என்பதில் நாம் ஒத்துப் போகலாம். அதே வேளையில் நமது இந்தச் சிறு வாழ்க்கையில் நாம் செய்துள்ளவை, நித்திய தண்டனையைப் பெறுமளவுக்கு அவ்வளவு மோசமானவைகள் அல்ல என்பதால் நரகத்தின் பயங்கரங் களை நாம் மறுக்கலாம். அநீதி செய்பவர்கள் அவருடைய பழி வாங்கு தலுக்கு ஏற்றவர்களாயிருப்பதை விடவும் அதிகமாகவே, நீதிமான்கள் தேவனுடைய கிருபையைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களா கின்றார்கள் என்று நாம் எண்ணலாம்.

சிலர், தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்று

டன் நித்திய தண்டனையானது ஒத்திசைய முடியாது என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கலாம். எனவே, தேவன் அன்பாகவும், தயாளமாகவும், சகிப்புத் தன்மையுள்ளவராகவுமே இருக்கிறார் (1 தீமோ. 1:2; 1 யோவா. 4:8) என்று அவர்கள் வேதாகமத்திலிருந்து விளக்கம் தரத் தேடிக் கொண்டிருக்கலாம். அவர்கள் தேவனுடைய மறுபக்கத்தைப் பாராமல் விட்டுவிடுகின்றார்கள்: அவர் கோபம் மற்றும் பழிவாங்குதலின் தேவனாகவும் இருக்கின்றார்.[1] அவர் அக்கிரமத்தை வெறுத்து (எபி. 1:9), கண்டிப்பைக் காண்பித்து (ரோமர் 11:22), பட்சிக்கிற அக்கினியாயிருக்கின்றார் (எபி. 12:29). நாம், "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்" (ரோமர் 11:22) என்று படிக்கின்றோம். எபிரெயர் 10:31, "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" என்று கூறுகின்றது.

தேவனுடைய தயவானது புதிய ஏற்பாட்டில் பேதுருவுடன் அவர் நடந்து கொண்ட முறையில் சித்தரிக்கப்படுகின்றது (லூக். 22:31, 32), பவுலுடனும் (1 தீமோ. 1:15, 16) மற்றவர்களுடனும் அவர் நடந்து கொண்ட முறையிலும் இது சித்தரிக்கப்படுகின்றது. அனனியா, சப்பீராள் ஆகியோரின் மரணத்திலும் (அப். 5:1-10), ஏரோதின் மரணத்திலும் (அப். 12:20-23) அவரது உக்கிர கோபம் காணப்படுகின்றது. இந்த மக்கள் செய்த பாவங்களினிமித்தம் தேவன் இவர்களை மரணமடையும்படி அடித்தார்.

கீழ்ப்படியாமையுள்ளவர்களிடத்தில் தேவன் நடந்து கொள்ளும் முறையானது, அவர் கடுமையான தண்டனை தரக் கூடியவர் என்று காண்பிக்கின்றது. தேவனை அன்புள்ள தேவன் என்று மட்டும் பார்க்கின்றவர்கள், பாவத்தின்மேலும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்மேலும் அவர் காட்டுகின்ற கடுமையான கோபத்தைக் காணத் தவறுகின்றார்கள்.

## தண்டனையின் ஒரு முன்கண்ணோட்டம்

வாழ்க்கையில் இன்பங்கள் ஒருபோதும் முடிவடையாது என்று நாம் விரும்புகையில், உபத்திரவமானது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். நமக்கு ஏற்புடையதல்லா

தவைகளை நாம் சகித்துக் கொள்ளும்படி செய்வதின் மூலம் தவறுகளுக்கான சரியான தண்டனையானது நிறைவேற்றப்பட முடியும். தேவன் சொல்லுவதை அவர் செய்வார் என்பது புண் படுத்துவதாயிருக்குமென்றால், அப்படிப்பட்டவைகள் எதிர்பார்க்கப் பட வேண்டும். பாவம் நிறைந்த மனிதரை தேவன் வேறு எந்த வழியில் தண்டிக்க முடியும்?

## தண்டனை என்பது என்ன விதமாயிருக்கும்?

நாம் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி, காலங்களின் முடிவில் துன்மார்க்கருக்குக் கிடைக்கும் தண்டனையானது என்றென்றும் நீடித்திருக்கும் என்று வேதாகமம் போதிக்கின்றது. ‘‘நித்திய தண்டனை’’ எப்படியிருக்கும் என்று நாமாக எதுவும் கற்பனை செய்து கொண்டிருக்க முடியாது (மத். 25:46).

*நீர்மூலமாக்குதல்?* ஒருவர்கூட என்றென்றுமாகத் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று சிலர் போதிக்கின்றார்கள். அவர்கள், “நித்திய தண்டனை” என்பது கீழ்ப்படியாதவர்கள் நீர்மூலமாக்கப்படுவதே என்றும், இங்கிருந்து அவர்கள் கடந்து செல்லுவதே என்றென்றைக்கு மான தண்டனை என்றும் அர்த்தப்படுவதாகக் கூறுகின்றார்கள். இந்த உபதேசத்தை அவர்கள் துன்மார்க்கர் அழிக்கப்படுதல் அல்லது துன்மார்க்கர் நித்திய அழிவை அடைதல் பற்றிப் போதிக்கும் வசனங்களின் அடிப்படையில் கூறுகின்றார்கள் (மத். 10:28).

மத். 10:28ல் “அழிக்க” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள apollumi என்ற கிரேக்க வார்த்தையானது, ‘‘மடிந்து’’ என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத். 8:25) மற்றும் அது “காணா மற்போனது” (லூக். 15:4, 6) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மத். 9:17ல் இயேசு குறிப்பிடும் இரசத் துருத்திகள், கிழிந்துபோகும் என்றுதான் கூறப்படுகின்றது, நீர்மூலமாக்கப்படுவதாகக் கூறப்பட வில்லை; மற்றும் ஆடு, காசு, குமாரன் ஆகியோர் காணாமற் போனதாகவே (apollumi) நாம் காண்கின்றோம் (லூக். 15:6, 9, 24). இயேசு “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே” வந்தார் (லூக். 19:10), மற்றும் அவர், “என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்” (மத். 10:39) என்று வாக்குத்தத்தம் பண்ணினார். நீர்மூலமாக்கப்பட்டதைக் கண்டு பிடிக்கவோ அல்லது இரட்சிக்கவோ முடியாது. முடிவான சந்தர்ப்பப் பொருள் ஒவ்வொன்றிலும், apollumi என்ற வார்த்தையானது “காணாமற்போனது”, “கிழிந்துபோனது”,

"கெட்டுப்போனது", அல்லது "அழிவுக்குள்ளானது" என்றுதான் அர்த்தமாகின்றதே தவிர, "நீர்மூலமாக்கப்பட்டது" என்று அர்த்தப் படுத்தவே முடியாது.

துன்மார்க்கர் நித்தியத்திற்கும் தொடர்ந்து தண்டிக்கப்படுவார் கள்: "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14:11). பிசாசு, மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை யைப் பற்றிய விளக்கத்திலும் வெளி. 20:10ல் இதே விதமான விபரம் காணப்படுகின்றது, அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டதாக இதற்கு முன்பு வெளி. 19:20லும் கூறப்பட்டது. அக்கினிக் கடலானது தன்னில் தூக்கியெறியப்பட்டவர்களை நிர்மூலமாக்கியிருக்கு மென்றால், முன்னதாகவே அதில் வீசப்பட்ட மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும், பிசாசு அங்கு வீசப்படுவதற்கு முந்திய ஆயிரமாண்டு காலத்தில் அங்கு எரித்து முடிக்கப்பட்டிருப்பார்களே (வெளி. 20:2, 3). அப்படி நடக்காமல், அவர்கள் அந்த அக்கினிக்கடலிலே "இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி. 20:10) என்றுதான் நாம் படிக்கின்றோம்.

புதிய உடன்படிக்கையின் கீழ் வரும் தேவனுடைய கிருபையைப் புறக்கணிப்பவர்கள், மோசேயின் பிரமாணத்தைப் புறக்கணித்த இஸ்ரவேலர்மேல் நியமிக்கப்பட்ட தண்டனையைக் காட்டிலும் அதிக மோசமான தண்டனைக்குப் பாத்திரவான்களாயிருக்கின்றார்கள் (எபி. 10:28, 29). மோசேயின் பிரமாணத்தை மீறியவர்களுக்குத் தரப்பட்ட மிக மோசமான தண்டனை மரணமாக இருந்தபடியினால், மரணத்தைக் காட்டிலும் மிகவும் மோசமான தண்டனையே இவர்களுக்குக் கிடைக்கும். நரகமே அந்தத் தண்டனையாகும்.

உண்மையான தண்டனை? நரகம் (கிரேக்க மொழியில்: gehenna[2]) என்ற வார்த்தை இயேசுவால் மட்டுமே குறிப்பிடப்பட்ட ஒரு இடமாகும்,[3] இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு யாக். 3:6ல் உள்ள குறிப்பாகும். மரித்தவர்கள் இருக்கக் கூடிய இடைப்பட்ட இடமாகிய பாதாளத்திற்கும், துன்மார்க்கர் தண்டிக்கப்படும் இடமாகிய நரகத்திற்கும் இடையில் இருக்கும் தெளிவான வேறுபாடு கவனிக்கப் பட வேண்டும்.

Gehenna என்ற வார்த்தையானது முதன்முதலாக, எருசலேமுக்குத் தென்பகுதியில் உள்ளதும், இன்னோனின் குமாரர்களுக்குச் சொந்தமாயிருந்ததுமான மலையிடைச்சந்துப் பகுதியொன்றைக்

குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. விக்கிரக ஆராதனை செய்வோர் அந்த இடத்தில் தங்களது பிள்ளைகளை தீக்கடக்கப் பண்ணி அவர்களை விக்கிரகங்களுக்கென்று தகன பலியிட்டிருந்ததால் அந்த இடம் கர்த்தருக்கு அருவருப்பானதாகவும், வெறுப்புக்குரியதாகவும் இருந்தது.[4] இவ்விதமாக, இயேசுவின் நாட்களில் அந்த இடமானது எருசலேமின் குப்பைகளைக் கொட்டும் இடமாக இருந்தது. அது துர்நாற்றமுடையதாகவும், புழுக்கள் தொற்றியதாகவும், தொடர்ந்து எரியும் நெருப்பினால் புகைந்து கொண்டிருப்பதாகவும் இருந்தது. துன்மார்க்கர் தண்டிக்கப்படும் இடத்தைப் பற்றி விளக்கத் தகுதியுடைய ஒரு வார்த்தையாக gehenna என்ற வார்த்தையானது இயேசுவால் பயன்படுத்தப்பட்டது.

கெஹன்னாவின் அக்கினியை, சூளையின் அக்கினியென்பதாக இயேசு குறிப்பிட்டார் (மத். 13:42, 50). இந்த அக்கினியானது நித்தியமானதாகவும், என்றென்றும் அணைக்கப்படக்கூடாததுமாய் இருந்தது (மத். 3:12; 18:8; 25:41; மாற். 9:48[5]). மேலும் அவர் அந்தப் "புழு" சாகாமல் இருக்கும் என்றும் கூறினார். இறந்த சடலத்தை புழுக்கள் தின்று, அக்கினியானது பட்சித்த பிறகு தின்பதற்கு ஒன்றுமில்லாமையால் புழுக்கள் இறக்க நேரிடும். அக்கினி மற்றும் புழுக்கள் என்பதை நேரடியாக அர்த்தம் கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பியிருக்கா விட்டாலும் கூட, தண்டனையின் முடிவற்ற இயல்பைச் சுட்டிக் காட்டுவதற்காக அவர் அந்தச் சொற்றொடர் களைப் பயன்படுத்தினார்.

அக்கினியானது சொல்லுக்குச் சொல் நேரான அர்த்தமுடைய தல்லவென்றால், இயேசு "அக்கினி" என்ற வார்த்தையை ஏன் திரும்பத்திரும்பப் பயன்படுத்தினார்? இதற்கு மாறான விதத்தில் ஆத்துமாக்களுக்குக் கிடைக்கும் தண்டனையை அவர் வேறு எந்த வகையான இயல்பான சொற்றொடர்களால், நாம் புரிந்து கொள்ளும்படியாக விளக்கியிருக்க முடியும்? பரலோகத்தைப் பற்றிக் கூட, அதன் அழகைப் பற்றிக் கூறுவதற்கு இயல்பான சொற்றொ டர்களே பயன்பட்டுள்ளது. இயேசு, நரகத்தின் பயங்கரத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக இயல்பான சொற்றொடர் களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

நரகத்தில் என்ன விதமான தண்டனை அனுபவிக்கப்படும்? கீழ்ப்படியாதவர்கள் எதை எதிர்பார்க்கக் கூடும்?

(1) நரகத்திற்கு அனுப்பப்படுகிறவர்களிடத்தில் "அகன்று

*போங்கள்'' என்று கூறப்படும் (மத். 7:23; 25:41; லூக். 13:27 ஆகியவற்றைக் காணவும்). அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப் படுவார்கள்.*

*(2) நரகத்தில் இருப்பவர்கள் தேவனுடைய சந்நிதானத்திலிருந்து நீங்கலாகித் தண்டிக்கப்படுவார்கள் (2 தெச. 1:10). இது, தேவன் அவர்களைக் காண்பதில்லை, கேட்பதில்லை அல்லது அவர்களுக்கு உதவி செய்வதில்லை என்று சுட்டிக்காட்டுகிறது.*

*(3) பிசாசும், அவனுடைய தூதர்களும், துன்மார்க்க வாழ்க்கை வாழ்ந்த ஒவ்வொருவரும் நரகத்தில் இருப்பார்கள் (மத். 25:41).*

*(4) அக்கினியாலும், கந்தகத்தாலும் வாதிக்கும் இடமாக நரகம் இருக்கும் (வெளி. 14:10; 20:10; 21:8 ஆகியவற்றைக் காணவும்).*

*(5) நரகத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து அழிக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது (2 தெச. 1:10).*

*(6) அவர்கள் தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் (1 கொரி. 6:9; கலா. 5:21).*

*(7) அவர்கள் தேவனுடைய உக்கிர கோபத்தினால் உபத்திரவப் படுவார்கள் (மத். 3:7; ரோமர் 2:5; 5:9; எபே. 5:6; கொலோ. 3:6ஐக் காணவும்). அது கலப்பில்லாமல் வார்க்கப்படும் (வெளி. 14:10).*

*(8) அவர்கள் புறம்பான காரிருளில் தள்ளப்படுவார்கள் (மத். 8:12; 22:13; 25:30; 2 பேது. 2:17; யூதா 13 ஆகியவற்றைக் காணவும்).*

*(9) அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் (மாற். 16:16; யோவா. 5:29; 2 தெச. 2:12; 2 பேது. 2:3).*

*(10) அவர்கள் அழிவின் நிலையில் இருப்பார்கள் (கலா. 6:8).*

*(11) அவர்கள், தேவனுடைய பழி வாங்குதலினால் உபத்திரவப் படுவார்கள் (ரோமர் 12:19).*

*தண்டிக்கப்படுபவர்களின் பதில்செயலானது விளக்கப்படுத்த முடியாததாக இருக்கும்; அவர்கள் உபத்திரவத்தையும் கடுந்துயரத்தை யும் அனுபவிப்பார்கள் (ரோமர் 2:9). அவர்கள் அழுது கொண்டும், தங்களின் பற்களைக் கடித்துக் கொண்டும் இருப்பார்களென்று இயேசு கூறினார். இது கடுமையான வலியை விளக்கப்படுத்துகின்றது (மத். 8:12; 13:42, 50; 22:13; 24:51; 25:30; லூக். 13:28).*

*நரகத்தைப் பற்றிக் கூறப்படுபவை யாவும் பயங்கரமான மோசமாயிருக்கின்றது; நல்லது ஒன்றுகூடக் கூறப்படவில்லை. அங்கு போகின்றவர்கள் யாவரும், துன்மார்க்கமாய் வாழ்ந்த எல்லாரோடும், பிசாசு மற்றும் அவனது தூதர்களோடும் கூடச் சேர்ந்திருக்க வேண்டும்*

(மத். 25:41)! அவர்கள் தேவனோடோ அல்லது நீதிமான்களோடோ ஒருபோதும் இருப்பதில்லை. அவர்கள் என்றென்றைக்கும் அந்தகாரத் திலேயே வாழ்ந்திருப்பார்கள். வெளிச்சமாயிருக்கின்ற தேவன் அங்கு இருக்க மாட்டார். சூரியன், வான்பொருட்கள், நட்சத்திரங்கள் மற்றும் இவை போன்ற நமது அண்டத்தின் ஒளி கொடுக்கும் பொருள் வேறு எதுவும் கூட அங்கிருக்க மாட்டாது. தேவனும், இந்த வெளிச்சங் களும் இல்லாதபோது காரிருள் மட்டுமே அங்கிருக்கும்.

## *யார் நரகத்திற்குப் போவார்கள்?*

*யார் தண்டிக்கப்படுவார்கள் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பவுல் "அவர்களை முரட்டாட்டமும், மனந்திரும்பாத இருதயங்களும் உள்ளவர்களென்று விளக்கப்படுத்தினார், அவர்கள், சுயநல நோக்கத்தோடு, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிகின்றவர்களாய்" (ரோமர் 2:5, 8, 9) இருக்கின்றார்கள் மற்றும் பொல்லாங்கு செய்கின்றவர்களாயிருக்கின்றார்கள். மேலும் அவர்களுக்குள், "தேவனை அறியாதவர்களும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களும்" (2 தெச. 1:7) இருப்பார்கள் என்றும் அவர் எழுதினார். பரலோகத் திற்குப் போகாதவர்களின் பட்டியல்களைப் பவுல் கொடுத்தார், அதன் அர்த்தம், அவர்கள் எல்லாரும் நரகத்திற்குப் போவார்கள் என்பதே யாகும் (1 கொரி. 6:9; கலா. 5:21; எபே. 5:5 ஆகியவற்றைக் காணவும்). அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையினால், நரகமே அவர்களின் நித்தியமான தங்கும் இடமாயிருக்கும்.*

*புதிய ஏற்பாடானது பயத்தைப் பற்றிப் பேசுவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. பவுல், "ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்க தென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம் ..." (2 கொரி. 5:11) என்று எழுதினார். இதே எண்ணக் கோர்வையில் பேதுரு, "அன்றியும், பட்சபாதமில்லாமல் நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசி களாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்" (1 பேது. 1:17) என்று எழுதினார். இயேசு, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத். 10:28) என்று கூறினார். மேலும் பவுல், "ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே,*

*நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி. 2:12) என்றும் எழுதினார்.*

*"பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1 யோவா. 4:18) மற்றும், பூரண அன்பானது நம்மைக் கீழ்ப்படிதலுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளும் (யோவா. 14:15, 21; 1 யோவா. 5:3). நாம் அன்பையும், தெய்வ பயத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவன்மேல் நாம் கொண்டுள்ள அன்பானது அவருக்கு ஊழியம் செய்யும்படியாக நம்மை அவரிடத்தில் கிட்டிச் சேர்க்க வேண்டும், நாம் தேவனிடத்தில் வைக்கும் பயமானது அவருடைய சித்தத்தைச் செய்யப் போதுமான கனத்தை அவருக்கு நாம் செலுத்தும்படிச் செய்ய வேண்டும் (1 பேது. 1:17).*

*கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவையும் நாம் நரகத்திற்குப் போக விரும்பாதிருக்கும்படி நம்மை ஏற்றுக்கொள்ளப் பண்ண போதியவைகளாய் இருக்க வேண்டும். நரகம் என்பது நமக்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை, ஆனால் பிசாசுக்கும் அவன் தூதர்களுக்குமே அது நியமிக்கப்பட்டிருக்கின்றது. உலகத்தின் வரலாற்றில் அவன் உண்டாக்கியிருக்கின்ற இடர்ப்பாடுகளின் காரணமாக, தேவனால் வடிவமைக்கப்பட்ட அக்கினியான நரகத்திற்கு அவன் என்றென்றைக்கும் பாத்திரவானாய் இருக்கின்றான். ஆயினும், இதை நாம் கூறினால், தேவனுக்குக் கீழ்ப்படியாமல், பிசாசைப் பின்பற்றுகின்ற யாவரும் தங்களின் பாவங்களுக்கு இலேசான கடிந்து கொள்ளுதலைப் பார்க்கிலும் அதிகமான தண்டனை பெறப் பாத்திரவான்களாய் இருக்கின்றார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.*

*நரகத்தின் தண்டனையிலிருந்து தப்பிப்பதும், பரலோகத்தை அடைவதுமே நமது மாபெரும் நோக்கமாய் இருக்க வேண்டும். நரகத்தில் மிகச் சிறந்த இடம் ஒன்று இருக்குமென்றால், அந்த நரகத்தின் மிகச் சிறந்த இடத்தைப் பார்க்கிலும், பரலோகத்தின் மிகத் தாழ்வான இடம் இருக்குமென்றால், பரலோகத்தின் அந்த மிகத் தாழ்வான இடமே உயர்வாக மதிக்கத் தகுந்ததாகும். தேவன் விரும்புகிறபடி வாழ்ந்து, மற்றவர்களும் பரலோகம் செல்லும்படி உதவி செய்வதன் மூலம் நாம், நரகத்தின் பயங்கரங்களைத் தவிர்க்க முடியும்.*

## பரலோகத்தின் ஒரு முன்கண்ணோட்டம்

*"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத். 5:12; லூக். 6:23) என்பது இயேசு செய்த ஊக்கமூட்டும் ஒரு வாக்குத்தத்தமாகும். கிறிஸ்தவர்களாயிருக்கின்ற நமக்கு, இந்த உலக வாழ்க்கையை விட அதிக மகிமையான வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை (எபே. 4:4) உண்டு, கிறிஸ்தவர்களாய் இருப்பது தகுதியானதே என்பதை உறுதிப்படுத்தும் ஒரு ஆசீர்வாதமாக இது இருக்கின்றது. வேறு எந்த மக்களும், பரலோகத்தைப் பற்றி இவ்வளவு அதிகமான பாடல்களைப் பெற்றிருக்கவில்லை, அல்லது எதிர்கால இல்லத்தைப் பற்றி அவர்கள் இவ்வளவு அதிகமாய்ப் பாடிக் கொண்டிருக்கவுமில்லை. மற்றவர்களை வருத்தத்திலும், நம்பிக்கையற்ற நிலையிலும் ஆழ்த்துகின்ற சோதனைகளும் பாரங்களும் நம்மால் சந்தோஷத்துடன் சுமக்கப்படுவதற்கு, நமது பரலோகத்தின் எதிர்பார்ப்பே காரணமாய் இருக்கின்றது (1 தெச. 4:13).*

*இயேசு, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா. 10:10) என்று கூறினார். பரிபூரண வாழ்க்கை என்பது பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையாக இருப்பதில்லை. பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12) என்று எழுதினார். பவுல் சகித்துக் கொண்ட உபத்திரவங்கள், அவரை, "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி. 15:19) என்று எழுத வைத்தது. கிறிஸ்துவுக்கான அவரது போராட்டங்களைப் பற்றி அவர், "நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" (1 கொரி. 15:32; ஏசா. 22:13ஐக் காணவும்).*

*இதைப் பற்றி நாம் மிகவும் எதிர்நோக்குவதற்கான கருத்துக்களைப் புதிய ஏற்பாடு தருகின்றது. இரட்சிக்கப்பட்டவர்களின் நித்திய இல்லம் என்ற வகையில் பரலோகமானது வேதவசனங்களில் அடிக்கடி அல்லது விபரமாக விளக்கப்பட்டிருக்காவிட்டாலும், பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் அநேக முறைகள் குறிப்பாகத் தெரிவிக்கப்படுகின்றன.*

பரலோகத்தில் ஒரு இல்லிடம் இருக்கின்றது என்ற கிறிஸ்தவ நம்பிக்கையானது நமக்குள் மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது (ரோமர் 12:12). பழைய ஏற்பாட்டின்கீழ் இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைக் காட்டிலும் (எபி. 8:6; 10:34) இது மேலான ஒரு வாக்குத்தத்தமாயிருக்கின்றது. தேவன் அவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கையை அவர்கள் காத்துக்கொண்டால் கானான் நாட்டிலே நீண்ட ஆயுளுடன், நிறைந்த செல்வங்களுடன் வாழ்வார்கள் என்று அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தார்கள் (உபா. 4:13; 5:33). நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருப்பது, பழைய நிலைக்கு மறுபடியும் கொண்டு வரப்படுகின்ற, பூமிக்குரிய ஒரு இடமாக இருக்குமென்றால், புதிய ஏற்பாட்டின் கீழ் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள, நமது நம்பிக்கைக்கு ஆதாரமாயிருக்கின்றவைகள், தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் செய்த நாட்டைக் காட்டிலும் அதிகம் சிறந்ததாக இருக்க முடியாது (உபா 28:1-14). இருப்பினும், நமது நம்பிக்கையானது, வளமான வாழ்வுடன் கூடிய ஒரு மனையிடம் மற்றும் பூமியில் நீடித்த ஆயுள் ஆகியவற்றைக் கொண்டதாயிராமல், பரலோகத்தில் என்றென்றும் இருக்கின்ற ஒரு இடமாகவே உள்ளது (1 பேது. 1:4, 5). இந்த பூமியிலே நாம் எவ்வளவு நீண்ட நாட்கள் வாழ்ந்தாலும், இங்கு தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தாலும், சரீர வாழ்க்கை என்பது தற்காலிகமானதாகவே இருக்கின்றது. புறம்பான மனுஷன் நாளுக்கு நாள் அழிந்து கொண்டிருக்கின்றான் (2 கொரி. 4:16); ஒருநாளில் நாம் எல்லாருமே மரிப்போம் (எபி. 9:27). அதன் பிறகு நாம் இந்த பூமியில் வாழ்வு எதையும் அனுபவிக்கப் போவதில்லை-வேறு ஒரு மனிதப் பிறவியாகவோ அல்லது வேறு எவ்வித உயிரினமாகவோ நாம் ஆகப் போவதில்லை. இந்த வாழ்க்கைக்கு அப்பால், நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, நாம் ஊழியம் செய்திருக்கும் தேவனுடன் பரலோகத்திலோ (மத். 25:34) அல்லது அவருக்கு ஊழியம் செய்ய மறுத்தவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்ற நித்திய அக்கினியிலோ (மத். 25:41) நமது வாழ்வு தொடரும்.

## பரலோகம் எப்படியிருக்கும்?

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி பரலோகத்தை நாம் புரிந்து கொள்வதற்கு, "பரலோகம்" என்ற வார்த்தையானது மூன்று வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளதை நாம் உணர்ந்து கொள்ள

*வேண்டும் (2 கொரி. 12:2-4): (1) மேகங்கள் இருக்கின்ற வானமும் (உபா. 11:11), பறவைகள் பறக்கின்ற இடமுமாக (சங். 79:2; ஆகாயம்) இது குறிப்பிடப்படுகின்றது. (2) நட்சத்திரங்களும் மற்ற ஆகாயப் பொருட்களும் இருக்கின்ற ஆகாய விரிவு (ஆதி. 1:14-18; உபா. 1:10; வானம்) மற்றும் (3) தேவன் வாசம்பண்ணுமிடம், பூமியில் மீட்கப் பட்டவர்கள் யாவரும் இங்கு என்றென்றும் வாழ்வார்கள் (1 பேது. 1:5; பரலோகம்). இந்தக் கடைசிக் குறிப்புதான் இப்பாடத்தில் கவனிக்கப் பட வேண்டியதாக இருக்கின்றது.*

*"பரலோக இராஜ்யம்" என்ற சொற்றொடரானது (1) தேவனுடைய நித்திய இராஜ்யம் (மத். 13:43), (2) இரட்சிக்கப் படுகிறவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்ற இராஜ்யம் (மத். 25:34) மற்றும் (3) சமீபத்திலிருக்கிறது என்று கிறிஸ்து பிரசங்கித்ததும், மற்றவர்களைப் பிரசங்கிக்க அனுப்பியதுமான இராஜ்யம், என்று குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இராஜ்யமானது, "பரலோக இராஜ்யம்" (மத். 4:17); "தேவனுடைய இராஜ்யம்" (மாற். 1:15); "என் இராஜ்யம்" (லூக். 22:30) மற்றும் "தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யம்" (கொலோ. 1:13) என்றெல்லாம் குறிப்பிடப்பட்டது. இந்தச் சொற்றொடர்களின் ஊடாகச் செல்லும் நூல் போன்ற இணைப்பானது இவைகளின் அர்த்தத்தை ஒருங்கிணைக்கின்றது, ஏனென்றால் இவை ஒவ்வொன்றுமே பரலோகத்தின் ஆளுகையைக் குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவின் விசேஷித்த ஆளுகையானது சமீபத்தில் இருந்ததாக அவரால் பிரசங்கிக்கப்பட்டது (மத். 4:17), அவர் பரத்துக்கேறினவுடன் தொடங்கி (எபே. 1:19-23), அவர் மறுபடியும் வரும் வரைக்கும் இருப்பதாயுள்ளது (1 கொரி. 15:24). இரட்சிக்கப் பட்டவர்களின் நித்திய வெகுமதியாக அவர்கள் இந்த இராஜ்யத்தில் பிரவேசிப்பதை இப்பாடம் வலியுறுத்தும் (மத். 25:34). ஒவ்வொரு வசனப்பகுதியிலும் இந்தச் சொற்றொடரின் எந்தப் பயன்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சந்தர்ப்பப் பொருளே தீர்மானிக்க முடியும்.*

*பரலோகம் என்பது தொட்டுணரத்தக்க, இயல்பான உருவளவற்றதால், அதை விளக்கப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயல்பான சொற்றொடர்கள் யாவையும் அதன் ஆவிக்குரிய பகுதியினைக் குறிப்பாலுணர்த்துபவை என்பதை நாம் உணர வேண்டும். இந்தப் பகுதியைப்பற்றிப் பவுல், "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ...காணப்*

படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப் படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரி. 4:17, 18) என்று எழுதினார். தேவன் பரலோகத்தை பூமிக்குரிய சொற்றொடர்களால் விளக்கப்படுத்தி னாலும், அது சரீரப் பிரகாரமானது என்று எண்ணப்படக் கூடாது.

இந்த பூமியானது ஒரு ஆவிக்குரிய குடியிருப்பாக புதுப்பிக்கப் படவோ அல்லது மாற்றப்படவோ போவதில்லை. அப்படியிருந்தால், சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு, "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5) என்று கூறியவரைப் பற்றி கவலைப் படத் தேவையில்லை. அது போலவே, "பின்பு, நான் புதிய வானத்தை யும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின ..." (வெளி. 21:1) என்ற கூற்றையும் சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளத் தேவையில்லாது போகும்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கான புதிய எருசலேமானது பூமியில் அறியப்பட்டவைகளிலேயே விலை உயர்ந்த பொருட்களால் ஆனதாக விவரிக்கப்படுகின்றது (வெளி. 21:11-21). இப்படிப்பட்ட விளக்க மானது மிகவும் மரியாதைக்குரியதாகவும், மனித கற்பனைக்கு அப்பாற் பட்டதாகவும் இருக்கின்றது. அழியக் கூடியவர்களாகிய நாம் இந்த உருவகத்தைப் பெற வேண்டுமென்று தேவன் விரும்பினார். நாம் அவரது இராஜ்யத்தில் மகிமைப்படுத்தப்படும்போது நாம் அனைவரும் பயபக்தியுடனிருப்போம் (1 தெச. 2:11; எபி. 2:10), அதன் மேன்மை யான மகிமையைப் பெற்றிருப்போம் (ரோமர் 8:18), மற்றும் அந்த மகிமையில் பங்கேற்பவர்களாய் இருப்போம் (1 பேது. 5:1). அவர் "தமது பரிசுத்தவான்களில் மகிமைப்படுவார்" (2 தெச. 1:9). இது ஒரு கடந்து போகும் பகுதியல்ல ஆனால் பரலோகத்தின் குடிமக்களாகிய நமக்கு, "அதிக நித்தியமான கனமகிமையை" (2 கொரி. 4:17)த் தருகின் றது. பூமியோடு ஒப்பிடுகையில், இது "அதிக மேன்மையும் நிலை யுள்ளதுமான சுதந்திரமாய்" (எபி. 10:34), "மேன்மையான பரமதேச மாய்" (எபி. 11:16) இருக்கின்றது.

தேவனோடும், இயேசுவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் (வெளி. 21:3), வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட ஆச்சரியமான மக்க ளோடும் கூட நித்தியத்திற்கும் நாம் பரலோகத்தில் ஐக்கியப் பட்டிருப் போம் என்பதே பரலோகத்தின் மிகவும் ஆச்சரியப்படத் தக்க பண்பா கும். பரலோகத்தில் நாம் பெறப்போகும் ஐக்கியத்துடன், இந்தப் பூமியில் இருக்கின்ற எந்த ஐக்கியமும் ஒப்பிடப்பட முடியாததாகும்.

பரலோகத்தின் மகிமையையும், நாம் அனுபவிக்கப் போகும்

ஐக்கியத்தையும் நாம் ஒரு கணம் கண்ணோக்கினால், நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் அதைப் பற்றிக் கனவு காணவும், அதை நோக்கி ஊழியம் செய்யவும், அதற்காகத் திட்டமிடவுமே உள்ளக் கிளர்ச்சியுடன் செயல்பட்டு, அங்கு போக விரும்புகின்றவர்களாயிருப்போம். பவுல், "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்ல என்று எண்ணுகிறேன்" (ரோமர் 8:18) என்று எழுதினார்.

## பரலோகத்தில் என்ன இருக்கும்?

பரலோகத்தை நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பூமியில் நமக்குத் தேவைப்படும் பொருட்களான சூரியன், சந்திரன் அல்லது விளக்கு முதலியவை பரலோகத்தில் இருக்காது; இரவு என்பதே அங்கு இருக்காது, ஏனெனில் ஆட்டுக் குட்டியானவரே (இயேசு) அங்கு வெளிச்சமாய் இருப்பார் (வெளி. 21:23, 25; 22:5). தேவனிடத்தில் செல்வதற்கு நாம் ஏற்கனவே வழியைப் பெற்றுள்ளோம் என்பது, ஒரு ஆலயம் தேவைப்படாது என்று அர்த்தப்படுத்துகின்றது, ஏனென்றால், தேவனும் ஆட்டுக்குட்டியானவருமே ஆலயமாயிருப்பார்கள் (வெளி. 21:22).

நமக்கு சரீரப் பிரகாரமான உணவு தேவைப்படாது, ஏனெனில் ஜீவ நதியின் தண்ணீரினாலும், ஜீவ விருட்சத்தின் கனியினாலும் வாழ்க்கை தாங்கி நிறுத்தப்படும் (வெளி. 22:1, 2). நாம் தேவனை விட்டு விலகாமலிருப்போம், ஏனென்றால், "அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து, அவர்களுடைய தேவனா யிருப்பார்" (வெளி. 21:3). தேவன் மற்றும் ஆட்டுக்குட்டியான வருடைய சிங்காசனம் அங்கிருக்கும், அதனால் அங்கு ஒரு சாபமு மிராது (வெளி. 22:3). நமது புதிய வாசஸ்தலத்தில் நீதி மட்டுமே இருக்கும் (2 பேது. 3:13).

## நாம் எப்படி இருப்போம்?

நமது இயல்பான சரீரங்கள், ஆவிக்குரிய சரீரங்களாக மாற்றப்படும் (1 கொரி. 15:44, 52-54). இயல்பான சரீரங்கள் நாம் பிரவேசிக்கும் ஆவிக்குரிய உருவளவிற்குத் தகுதியற்றவைகளாகும்,

ஏனென்றால், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" (1 கொரி. 15:50). தேவன் ஆவியாயிருப்பதால் (யோவா. 4:24) தேவனுடைய ஆவிக்குரிய ஆளுகைப் பகுதி அவருக்கு இயல்பானதாகும், தூதர்களும் ஆவிகளாயிருப்பதால் (எபி. 1:14) அவர்களுக்கும் இது இயல்பானதாகும். அந்த உருவளவில் இருக்கும் சரீரத்தைப் பற்றி நம்மால் புரிந்து கொள்ள முடியாது, ஆனால், "அவர் வெளிப்படும்போது, நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்" (1 யோவா. 3:2) என்று நமக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளது. நாம் தேவனைப் பார்ப்பதற்கு அவரது உருவளவில் பிரவேசிக்க வேண்டும், ஏனென்றால் மாம்சப் பிரகாரமானவர்கள் தேவனைத் தரிசிக்க முடியாது (1 தீமோ. 6:16). இயேசு, "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:21). இது நடைபெறும் போது, நாம் "அவரது முகத்தைத் தரிசிப்போம்" (வெளி. 22:4), இந்த முகமானது நமது இயல்பான சரீரத்திலிருந்து பார்க்கப்பட்டால் நம்மால் உயிர் வாழக் கூடாமல் போய்விடும் (யாத். 33:20).

நாம் மறுரூபப்படுத்தப்படும்போது, பரலோகவாசிகளின் மகிமையைப் பெறுவோம். நாம் "கிறிஸ்துவுடனே கூட மகிமைப் படுத்தப்பட்டு" (ரோமர் 8:17), மகிமை, கனம் மற்றும் சமாதானத்தில் பிரவேசிப்போம் (ரோமர் 2:7, 10). நமது புதிய நிலையில் நாம், "ராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்போம்" (மத். 13:43). "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவோம்" (1 கொரி. 15:49).

நாம் நித்தியவாசிகளாக, "நித்திய ஜீவனைப்" பெற்று, என்றென்றும் மரிக்க முடியாதவர்களாயிருப்போம் (லூக். 20:36; வெளி. 21:4). "நித்திய ஜீவனை" என்பது நமக்கு உடைமையாக்கப்படுகின்ற[7] அல்லது இயேசுவை விசுவாசித்து அவருக்கு ஊழியம் செய்வதால் நாம் வெகுமதியாகப் பெறுகின்ற[8] வாழ்க்கையின் தரத்தையும் அதன் நீடித்த தன்மையையும் அர்த்தப்படுத்துகின்றது.

## நாம் என்ன செய்து கொண்டிருப்போம்?

பரலோகத்தில் நாம் என்ன செய்து கொண்டிருப்போம் என்பதை,

*ஒருவேளை நல்ல காரணத்திற்காகவே, தேவன் நமக்கு முழுமையாக விளக்கப்படுத்தவில்லை. நாம் சரீரப்பிரகாரமாக இருப்பதால் ஆவிக்குரிய ஜீவிகள் செய்வது மிகவும் ஊக்கமுள்ளதாயிருக்கும் என்பதை நாம் கவனித்திருக்கவில்லை. சரீரப்பிரகாரமான விஷயங்களின் அடிப்படையிலேயே நமது சந்தோஷம் இருப்பதால், பரலோகத்தின் ஆவிக்குரிய செயல்பாடுகள் பற்றி ஊக்கமடைவதில் நாம் இடர்பாடு அடையக் கூடும்.*

*பரலோகத்தில் நாம் சந்தோஷத்தை மட்டுமே அறிந்திருப்போம், ஏனென்றால், தேவன், ''அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின" (வெளி. 21:4). இந்த வாழ்க்கையின் சரீரப் பிரகாரமான விஷயங்கள் உண்டாக்கிய வருத்தங்கள் அல்லது சாபங்கள் ஆகியவை இனி இருக்காது (வெளி. 22:3). இரட்சிக்கப்பட்டவர்கள் நமது எஜமானுடைய "சந்தோஷத்திற்குள்" பிரவேசிப்பார்கள் (மத். 25:21, 23). நாம் இந்த வாழ்க்கையின் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவோம் (வெளி. 14:13; எபி. 4:8-11).*

*நித்தியம் முழுவதிலும் நாம் களிகூர்ந்திருப்போம், ஏனென்றால் நாம் பிதாவோடும் (வெளி. 21:3), இயேசுவோடும் (யோவா. 12:26[9]), தூதர்களோடும் (லூக். 9:26) மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களோடும் (மத். 13:43) இருப்போம். நாம் இயேசுவுக்கு சந்தோஷமாக ஊழியம் செய்துகொண்டு (வெளி. 22:4) அவருடன் என்றென்றும் அரசாண்டு கொண்டிருப்போம் (2 தீமோ. 2:12; வெளி. 22:5). பரிசுத்தவான்களில் அவர் மகிமைப்படுவார் (2 தெச. 1:9). இது இயேசுவால் இரட்சிக்கப்பட்டவர்களினால் இயேசு மிகவும் அதிகமான கனமும், மகிமையும் அடைவார் என்பதையே அர்த்தப்படுத்துவதாய் இருக்க வேண்டும் (பிலி. 2:10, 11). அன்பு, ஐக்கியம் மற்றும் சந்தோஷம் ஆகியவை உள்ள ஆச்சரியமான இடமாகப் பரலோகம் இருக்கும்.*

## *யாரெல்லாம் பரலோகத்திற்குச் செல்வார்கள்?*

*பரலோகத்தின் மகிமைகள், தகுதிகள் அடிப்படையில் கொடுக்கப்படாமல், கிருபையின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகின்றன (2 தெச. 2:16). நமது நற்செயல்களினால் பரலோகத்தைப் பெற்றுக் கொள்வதாக நாம் பெருமை பாராட்ட முடியாது (எபே. 2:8, 9; தீத்து 3:5). நாம், ''நாங்கள் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம்*

*செய்தோம்" என்று மட்டுமே கூறுவோம் (லூக். 17:10).*

*பரலோகம் நமக்கு ஒரு சுதந்தரமாகக் கொடுக்கப்படும்.[10] ஒரு சுதந்திரம் என்பது ஈட்டப்படுவதல்ல; அது ஒரு ஈவு ஆகும். தேவனுடைய பிள்ளைகளே சுதந்தரவாளிகளாய் இருக்கின்றார்கள் (ரோமர் 8:16, 17; கலா. 3:6, 7, 29). தண்ணீரினாலும், ஆவியினாலும் பிறப்பதால் (யோவா. 3:5), நாம் தேவனால் பிறக்கின்றோம் (யோவா. 1:12, 13). இவ்விதமாகவே விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், பரலோகத்தின் சுதந்திரராகவும் ஆகின்றோம் (கலா. 3:26, 27).*

*தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்துகின்றவர்கள் (1 கொரி. 6:9, 10; கலா. 5:19-21) பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படவில்லை, அவர்கள் தீட்டானவர்களாகவே இருக்கின்றார்கள், அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் (வெளி. 21:27; 2 பேது. 3:13, 14). இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்களே பரலோகத்தில் பிரவேசிப்பவர்களாயிருக்கின்றார்கள் (எபே. 5:25, 27; கொலோ. 1:19-22).*

## முடிவுரை

*தேவன் என்றென்றும் தண்டிப்பார் என்ற நினைவும், அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்கின்றவர்களின் நிலையும் மிகவும் பயங்கரமானது, ஆனால் அவரது வசனத்தில் உபதேசம் இருக்கின்றது. நீதிமான்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் போலவே, அநீதிமான்களுக்குக் கிடைக்கும் தண்டனையும் நித்தியமானதாக இருக்கும். இந்த உறுதியான விஷயமானது, நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தேவனைப் பிரியப்படுத்தத் தேடும்படிக்கு நம்மை ஊக்குவிக்க வேண்டும். நாம் பரலோகத்தில் தேவனோடு நித்தியத்திற்கும் இருப்பதை ஆதாயம் செய்து, பிசாசு மற்றும் அவன் தூதர்களின் நித்திய அக்கினியைத் தவிர்ப்போமென்றால், ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு துன்பமும், ஊழியத்தின் ஒவ்வொரு நிமிடமும் தகுதியுள்ளதாயிருக்கும்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 320 ம் பக்கங்களில்)*

1. *சிலர், தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றுடன் நித்திய தண்டனை என்பது இணக்க முள்ளதாக இருக்க முடியாது என்று முடிவு செய்கின்றார்கள். ஏன் இந்த முடிவு தவறானதாகும்?*
2. *கீழ்ப்படியாதவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள் என்ற கண்ணோட்டமானது ஏன் தவறான உபதேசமாயிருக்கின்றது?*
3. *நரகத்தில் என்ன வகையான தண்டனை எதிர்பார்க்க முடியும்?*
4. *தண்டிக்கப்படுபவர்களைப் பற்றிப் பவுல் எவ்விதம் விளக்குகின்றார்?*
5. *நமது மாபெரும் நோக்கமாக இருக்க வேண்டியது என்ன?*
6. *பழைய பிரமாணத்தின் கீழிருந்தவர்களுக்குத் தரப்பட்டதைக் காட்டிலும், பரலோகத்திற்கான கிறிஸ்தவ நம்பிக்கை எவ்விதம் சிறந்த வாக்குத்தத்தமாக இருக்கின்றது?*
7. *"பரலோகம்" என்ற வார்த்தை எந்த மூன்று வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது?*
8. *பூமியில் நமக்குத் தேவைப்படுகின்றவைகள் பரலோகத்தில் இருக்காது என்பது ஏன்?*
9. *யாரெல்லாம் பரலோகத்திற்குச் செல்வார்கள்?*

---

[1]ரோமர் *1:18; 2:8; 3:5; 12:19;* எபே. *5:6;* கொலோ. *3:6; 2* தெச. *1:7* ஆகியவற்றைப் படிக்கவும். [2]*Ge* என்றால் "பள்ளதாக்கு" என்றும் *Hinnon* என்றால் அந்தப் பள்ளத்தாக்கின் உரிமையாளர் என்றும் பொருள்படும் இரண்டு எபிரெயச் சொற்களின் கூட்டுருவான சொல்லினுடைய கிரேக்க மொழியின் எழுத்துருவாக்கமே *gehenna* ஆகும். [3]மத். *5:22, 29, 30; 10:28; 18:9; 23:15, 33;* மாற். *9:43, 45, 47;* லூக். *12:5;* யாக். *3:6* ஆகியவற்றையும் காணவும். [4]*2* இரா. *23:10*ஐக் காணவும்; *2* நாளா. *28:3; 33:6;* எரே. *7:31, 32; 19:6* ஆகியவற்றையும் காணவும். [5]மாற். *9:43;* லூக். *3:17* ஆகியவற்றைக் காணவும். [6]"பூரண" என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள *telios* என்ற கிரேக்க வார்த்தை "பக்குவப்பட்ட" என்ற அர்த்தத்தைத் தருகின்றது. [7]யோவா. *3:36; 5:24; 6:47, 54; 1* யோவா. *5:11, 13* ஆகியவற்றைக் காணவும். [8]மத். *19:29;* மாற். *10:30;* லூக். *18:30;* யோவா. *10:28;* ரோமர் *2:7; 6:22; 1* தீமோ. *6:12.* [9]யோவா. *14:3;*

*17:24; 2 கொரி. 5:6-8; பிலி. 1:23; கொலோ. 3:4; 1 தெச. 4:17 ஆகியவற்றைக் காணவும். [10]அப். 20:32ஐக் காணவும்; 26:18; எபே. 1:11, 14, 18; 5:5; கொலோ. 1:12; 3:24; எபி. 9:15; 1 பேது. 1:4 ஆகியவைகளையும் காணவும்.*